## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, மேட்டூர்

சி.சி.271 /2020 நாள் 29.10.2021

அ.சா. 1 செல்வகுமார் த.பெ சின்னப்பன்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை–

நான் மேச்சேரியில் குடியிருந்து மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இரவு நான் எனது என்பீல்டு இருசக்கர வாகனத்தை எனது வீட்டின் முன்பு வெளியில் நிறுத்தி வைத்திருந்தேன். காலையில் எனது அம்மா பார்த்து விட்டு வண்டியை காணவில்லை என்று சொன்னார். நான் அக்கம்பக்கம் தேடி பார்த்துவிட்டு பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். புகார் அ.சா.ஆ.1. பின்பு போலிசார் வண்டியை கண்டுபிடித்துவிட்டதாக கூறியதன் பேரில் நான் நீதிமன்றத்தில் மனு செய்து வண்டியை பெற்றுவிட்டேன். எதிரிகளை நான் காவல் நிலையத்தில் வைத்துதான் பார்த்தேன். பக்கத்து வீட்டினர் சொன்னதன் பேரில் எனக்கு தெரியும். தற்போது தன்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள வண்டி என்னுடையது தான். அது சா.பொ.ஆ 1. போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை–

எந்த தேதியில் வண்டி காணமல் போனது என்றால் 12.09.2019 இரவு வண்டியை நிறுத்தியிருந்தேன். காலையில் வண்டியை காணவில்லை. பின்பு மறுநாள் காலை 10 மணிக்கு புகார் கொடுத்தேன். பிறகு போலிசார்

14.09.2019 அன்று நிலையம் வரச்சொன்னார்கள். நான் நிலையத்தில் எதிரியை பார்த்த போது காலை 11 மணி இருக்கும். அன்று காவல் நிலையத்தில் 2 பேர் நின்று கொண்டிருந்தனர். போலிசார் சொல்லிதான் எதிரிகள் திருடியதாக எனக்கு தெரியும். எதிரிகள் வண்டியை திருடவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/– திரு.செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்–2,
மேட்டூர்.

# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, மேட்டூர்

சி.சி.271 /2020 நாள் 29.10.2021

அ.சா. 2 கிரிஜா க.பெ செல்வகுமார்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை–</u>

நான் மேச்சேரியில் குடியிருந்து வீட்டில் தான உள்ளேன். அ.சா.1 எனது கணவர். 12.09.2019 ம் தேதி இரவு எனது கணவர் என்பீல்டு இருசக்கர வாகனத்தை எங்களது வீட்டின் முன்பு வெளியில் நிறுத்தி வைத்திருந்தார். காலையில் பார்த்தபோது வண்டியை காணவில்லை . அக்கம்பக்கம் விசாரித்தபோது அருகில் குடியிருக்கும் ஒரு நாகம்மா என்பவர் அதிகாலையில் எங்களது வண்டியை ஒரு நபர் தள்ளிக்கொண்டு சென்றதாக சொன்னார். 13.09.2019 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 14.09.2019 அன்று வண்டி கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து போன் மூலம் தகவல் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை–</u>

எங்களது வண்டியை யார் திருடினார்கள் என்ற விவரம் எங்களுக்கு தெரியாது.

ஒம்/– திரு.செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்–2,
மேட்டூர்.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, மேட்டூர்

சி.சி.271 /2020 நாள் 29.10.2021

அ.சா.3 சித்தேஸ்வரன் த.பெ ரத்தினம்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை–</u>

நான் மேச்சேரியில் குடியிருந்து போட்டோ ஸ்டுடியோ வைத்து நடத்தி வருகிறேன். 12.09.2019 ம் அன்று அ.சா. 1 ன் வண்டி திருட்டுபோய்விட்டதாக அடுத்தநாள் காலை பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு 13.09.2019 ம் தேதி வண்டி காணமல் போனது ச்ம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். பின்பு வண்டி கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொன்னதாக அ.சா.1 என்னிடம் கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை–</u>

செல்வக்குமாரின் வண்டியை யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

ஓம்/– திரு.செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்–2,
மேட்டுர்.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, மேட்டூர்

சி.சி.271 /2020 நாள் 29.10.2021

அ.சா.7 வெங்கடாஜலம் த.பெ நடராஜன்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை–</u>

நான் மேச்சேரியில் குடியிருந்து கேபில் டி.வி வைத்து நடத்தி வருகிறேன். 13.09.2019 ம் அன்று மாலை டீ குடிப்பதற்காக நான் மேச்சேரி வந்த போது செல்வக்குமார் மளிகை கடை முன்பு போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தனர் அதில் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். பார்வை மகசரில் உள் 2 வது கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பார்வை மகசர் அ.சா.ஆ.2. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை–</u>

போலிசார் மாலை 4 மணிக்க விசாரித்து படம் வரைந்தனர். அந்த இடத்தில் உள்ள டீ கடையில் கூட்டமாக இருந்தனர் சுமார் 20 பேர் இருந்தனர். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு டீ கடையில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன். என்றால் சரியல்ல.

ஒம்/– திரு.செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்–2,
மேட்டுர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, மேட்டூர்

சி.சி.271 /2020 நாள் 29.10.2021

அ.சா.5 மணிகண்டன் த.பெ சின்ராஜ்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை–

நான் மேச்சேரியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். 14.09.2019 அன்று நான் எனது சொந்த வேலையாக தீவட்டிபட்டி சென்று வரும் போது தீவட்டிபட்டி சோதனை சாவடி அருகே வாகனங்களை நிறுத்தி சோதிக்கும் போது செல்வக்குமாரின் வண்டி இருந்ததை பார்த்து நான் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்வதற்குள் அங்கிருந்தவர்களே தகவல் சொல்லிவிட்டனர். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள் ள விவரங்கள் எனக்கு போலிசார் சொல்லிதான் தெரியும். கையொப்பத்தை நான் தீவட்டிபட்டி செக்போஸ்ட் அருகே வைத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.3 , கைபற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையொப்பம என்னுடையது தான். அது. அ.சா.ஆ.4 கைபற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை–

நான் தீவட்டிபட்டிரோட்டிலிருந்து பொம்மிடி செல்லும் சாலையில் உள்ள எனது கொழுந்தியா வீட்டிற்கு சென்றேன். அந்த ஊரின் பெயர் குறிப்பிட்டு எனக்கு தெரியவில்லை. தீவட்டிபட்டி ஓமலூர் தாலூக்காவை சார்ந்ததது. நான் காலை 11 மணிக்கு தீவட்டிபட்டி க்கு சென்றேன். திரும்பி

வரும் போது தீவட்டிபட்டி காவல் நிலையம் அருகில் தான் கையொப்பம் வாங்கினார்கள். பின்பு சுமார் அரை மணிநேரம் வைத்து என்னை விசாரித்தனர். அதன் பின்பு போலிசார் தீவட்டிபட்டி காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றனர். நான் மேச்சேரி காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தீவட்டிபட்டி காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சயம் அளி்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/– திரு.செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்–2,
மேட்டுர்.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, மேட்டூர்

சி.சி.271 /2020 நாள் 29.10.2021

அ.சா.6 பச்சாகவுண்டர் த.பெ பச்சியப்பன்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை–</u>

நான் மேச்சேரியில் குடியிருந்து பேக்கரி வைத்து நடத்தி வருகிறேன். 14.09.2019 அன்று நானும் எனது தம்பியும், தீவட்டிபட்டி சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தோம். தீவட்டிபட்டி அருகே போலிசார் வண்டியை பிடித்து நிறுத்தி எழுதிகொண்டிருந்தார்கள். நாங்கள் பார்த்தபோது எங்கள் வீட்டருகே காணமல் போன வண்டி அங்கிருந்தது. அங்கிருந்தத போலிசாரிடம் எனது வீட்டின் அருகே காணமல் போன வண்டி அங்கு உள்ளது என்று அடையாளம் காட்டினேன். பின்பு அங்கிருந்த போலிசார் மேச்சேரி காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமுலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் தெரியாது. கையொப்பம் மட்டும். அ.சா,ஆ 5 கைபற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பம என்னுடையது தான். அது. அ.சா.ஆ. 6, அதில் உள்ள விவரங்களை போலிசார் எனக்கு சொல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை–</u>

அ.சா.5 எனக்கு தம்பி முறை. நானும் அவரும் தான் தீவட்டிபட்டி சென்றோம். மேச்சேரியிலிருந்து தீவட்டிபட்டிக்கு கிழம்பும் போது காலை 8 மணி இருக்கும். எனது தம்பியின் கொழுந்தியா வீட்டிற்கு சென்றேன். அவரது வீடு தீவட்டிபட்டியிலிருந்து ஒன்றறை கி.மீ இருக்கும். அந்த

ஊருக்கு செல்லும் வழியில் காடையாம்பட்டி உள்ளது. தீவட்டிபட்டி பஸ் ஸ்டாப் அருகே வைத்து என்னை விசாரித்தனர். அங்கு நிறை கூட்டமாக இருந்தார்கள். அங்கு வைத்து தான் கையொப்பம் வாங்ககினார்கள். நான் தீவட்டிபடடி செல்லவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/– திரு.செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்–2,
மேட்டுர்.